# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூரு] யாழ்ப்பாணம்:- கர வருஷ மாசி மீ கச உ செவ்வாய்க்கிழமை (26 பிப்ரவரி 1952) [இல - அஎ]


திருத்தொண்டர் திருநாள்

## சிவாலயம் அமைத்த செங்கட்சோழ நாயனார்

### அரசுநடத்தி அருந்தொண்டும் ஆற்றிய அடியார்

சோழமண்டலத்திலே சந்தி தீர்த்தத்தின் பக்கத்தில், குளிர்ச்சிபொருந்திய அழகிய வனமொன்றிருந்தது. அந்த வனத்தில் கின்ற ஒரு வெண்ணாவல்கீழ் ஓர் சிவலிங்க மூர்த்தி தோன்றியருளுதலும், மூற்றவத்தையுடைய ஒரு வெள்ளானை அதைக் கண்டு தனது துதிக்கையால் தீர்த்தம் முகந்து அபிஷேகித்து மலர்களாலருச்சித்து வழிபட்டு வந்தது. இதனால் திருவானைக்கா என்னும் பெயர் இத்தலத்துக்குண்டாயிற்று.

இது இவ்வாறாக, விளங்கிய அறிவைப்பெற்ற ஒரு சிலந்தி சிவலிங்கப்பெருமான் மீது சருகுவிழாது தன் வாயினூலால் வரிந்து ஓர் மேற்கட்டி செய்தது. வழிபாடாற்றவந்த ஆனை அதை அசுசியமென்று நினைத்து அகற்றி வழிபாடாற்றியது. சிலந்தி மீண்டும் மேற்கட்டி ஆக்கியது. ஆனையுமதைப் பின்னரும் சிதைத்தது. அதைக்கண்ட சிலந்தி கோபங்கொண்டு ஆனையின் துதிக்கையுட் சென்று கடித்தது. ஆனை துதிக்கையை நிலத்தி லடித்திறக்கச் சிலந்தியுந் துதிக்கையிலுள்ளிருந்தபடியே இறந்தது. வெள்ளானை சிவகண நாதராகித் திருக்கைலாசமலையிற் சிவபெருமானைச் சேவிக்கும்பேறுபெற்றது.

அவதார வரலாறு

இக்காலத்திற் சுபதேவன் என்னுஞ் சோழ மகாராசன் தன் தேவி கமலவதியாருடன் சிதம்பரத்திலே மகப்பேறு வேண்டித் தவஞ்செய்ய அவ்வம்மையாருடைய வயிற்றிலே நடராசப்பெருமானது திருவருளால் அச்சிலந்தி மகவாய்வந்துதித்தது. பிரசவகாலமணைதலும் இந்தப் பிள்ளை ஒரு நாழிகை பிந்திப்பிறக்குமாயின் மூன்று புவனங்களையும் ஆளும் பேறுடையதாகும் என்று சோதிடர் சொல்லக் கேட்ட அம்மையார், குறித்த நேரம் வருமளவையும் பிள்ளை பிறவாமல், தம்மைத் தலைகீழாகக் கட்டுவித்தார். குறித்த நேரத்திற் கட்டவிழ்க்கப்படுதலும் பிள்ளை பிறந்தது. பிறகும் நேரம் பிந்தியதால் பிள்ளையின் கண்கள் சிவந்தன. சிவந்த கண்களைக் கண்ட அம்மையார் "என் கோச் செங்கண்ணனோ" என்று சொல்லியிறந்தார். சுபதேவ மகாராசன் பிள்ளையை வளர்த்துமுடிசூட்டி அரசுரிமை கொடுத்தபின் தவவொழுக்கத்தை மேற்கொண்டு வாழ்ந்து சிவலோகஞ் சார்ந்தார்.

தந்தை மகவாகிய கோச்செங்கட்சோழநாயனார் இராச்சியபரிபாலனம் இனிது இயற்றிவரும்பொழுது சிவாலயங்களை யமைப்பிக்குந் திருத்தொண்டை மேற்கொண்டார். அன்னவர்

"ஆனைக்கா விற்றான்
முன்னமருள் பெற்றதனை
யறிந்தங்கு
மானைத்தரித்த திருக்
கரத்தார் மகிழுங்
கோயில் செய்கின்றார்
ஞானச்சார்வாம் வெண்
ணாவலுடனே கூட
கலஞ் சிறக்கப்
பானற் களத்துத் தம்
பெருமானமரும்
கோயிற் பணிசமைத்தார்"
என்றபடி.

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

அரசியலில் ஈடுபட்டவுடன் அல்லது அரசாங்கப் பொறுப்பேற்றவுடன் சமயவுணர்ச்சி மறந்து உலகியல் உணர்ச்சியில் மயக்கங் கொள்ளும் இக்காலத்தில் முடிசூடிய மன்னர்கள் பிறைசூடிய பெருமான் தொண்டில் நின்றபெருமையை எடுத் துரைக்குங் கோச்செங்கட்சோழ நாயனார் சரிதை மிக மிகப் பொருத்தமாகும் அடியாரின் திருநாள் நேற்றைய தினம் கொண்டாடப்பெற்றது.

உ

### "விரிசுடராய் நின்ற மெய்யன்!"

திருச்சிற்றம்பலம்

வானிற்கே நீகுயிற் பிள்ளாய் மாலொடு நான்முகன்தேடி
ஓவியவருள்ளிற்ப வொண்டழல் விண்பிளக் கோங்கி
மேவியன் றண்டங் கடந்து விரிசுட ராய்நின்ற மெய்யன்
தாவி வரும்பரிப் பாகன் தாழ்சடை யோன்வரக் கூவாய்.

திருச்சிற்றம்பலம்

# மானமிழந்து மாற்றார் பின்செலல் தமிழ்மரபாகாது!

## நன்றி கொன்று - - நாடாள நாடிய விடணன்

### பழியட வந்த வாழ்வை வெறுத்த வீரமைந்தன்

நிகும்பலை யாகத்தால் நினைத்ததை முடிக்கக் கருதினான் மேகநாதன். மாற்றார் அறியாவண்ணம் யாகந் தொடங்கினான். தன் நிலைவை நிறைவேற்ற எண்ணினான் விடணனும். மேகநாதன் இறந்தொழிந்தபின்பே தான் வாழ்தல் உறுதியென எண்ணினன். மேகநாதனின் வினைத் திறனை அறிய விரைந்த தவனுளம். வண்டுருவங்கொண்டு நிகும்பலையடைந்தான். யாகம் முற்றவிடாது தடுத்தலே தனது வெற்றிக்கு வித்தாகுமென எண்ணினன். அவனேவற்படி


பண்டித புலவர்,
: த. வடிவேலு :


வானர சேனைகள் வேள்வியைக் குலைத்தன. இனி இராவணன் குல மழிவது திண்ணமென்பதை அறிந்துகொண்டான் மேகநாதன். தன் குலமழியக் கேடுசூழ்ந்த விடணனை செயல் கண்டு மானத்தால் மனந்துடித்தான். மானமிழந்தும் அரசாள எண்ணிய மாபாவியைக் கொல்வது தகுதியன்று என்ற பெருமையை உன்னினான். முன்னின்ற பேதையை நோக்கினான் மானமிழந்து மனிதர் பின்சென்று அவரேவல் செய்யுந் தன்மையை நேரிற் காண அவன் மனம் பொறுக்கவில்லை. அவனைக் கொன்று தான் பழிபட வாழ்வதையும் அவன் மனம் விரும்பவில்லை. அவன் மானமிழந்த நிலையைக் [illegible] விடவும் அவன் மனம் இசையவில்லை. தனகுலமழிய வினைசெய்து நின்ற அவன் முன்னின்று மொழிகின்றான்:

முரட்டடக் கண்டுமேத்தி
மனிதரை முறைமைகுன்றப்
பிரட்டரிற் புகழ்ந்து பேதை
யடியரிற்றொழுதபின் சென்று
இரட்டுறமுரசமென்ன
விரைத்ததேயிசைக்கின்றாயைப்
புரட்டுவன் றலையையின்று
பழியென வொழிவன் போலாம்.

அறம் வழுவாப் பெருவிறலுடன் விளங்கிய தென்னவர் மரபில்வந்த மேகநாதனுக்கு மானத்தையே தானமாக்கி ஆரியர்பின்சென்று தன்னாட்டையே தானும்பெற்றை இரந்துபெறும் நிலையில் நின்ற விடணன் நிலை பெருந்துயரளித்தது. இகழ்த்தகும் நிலைபெற்ற இராம ராதியோரை - அறம் வழுவிய பேதையோரை இகழ்வதற்கு மாற்றாகப் புகழ்ந்து நின்றான் என்பது தோன்ற 'முறைமை குன்ற' என்ற உரையில் வைத்துச் சுட்டுகின்றான். தமிழ்நாட்டவர் என்றும் எவர்க்கும் அடிமையாகாப் பெருவீரர் அவர்கள் மரபுக்கே வடுவிழைத்து நின்றான் என்பது தோன்ற 'பிற்சென்று' என்றான். தமிழ்மகன் முன்செலலேயன்றிப் பின்செல்லும் செயலை மற்றையோரேற்றனரேயன்றித் தமிழன் பின்செல்லும் வழக்கே வரலாறு பகராச் செயலாகும். மாற்றார்முன் நின்ற மேகநாதனுள்ளத்தை மானங் கொள்ளை கொள்ளுகிறது. அதன்வழிப்பட்ட வீர உணர்ச்சி மிக்கெழுகின்றது. ஆனாலும் "இன்று செய்தாரைப் பொறுத்தல் அவர்க்கு, நன்னயஞ் செய்து விடல்" என்ற அறவுரையை அளித்த ஆன்ற சான்றோரின் உள்ளம் அவனுள்ளத்தைத் தொடுகின்றது. ஆசைவயப்பட்டல்லவா இந்நிலையடைந்தான் விடணன் தம் குலத்திற்கே இன்னாதவனாகின்றான். இசைபட வாழ்தலையும் இவன் விரும்பவில்லை. இவனைக் கொன்றேனென்றால் யானும் இசைபட வாழ்தலென்ற தமிழ்மரபிற்கல்லவா இழிவேற்படுத்தியவனாவேன். இவன் பழிபட வாழ்கிறான் என்பதை உணர்ந்துகொள்ளட்டும், யான் பழிபட வாழ விரும்பவில்லையென்பதையும் உணர்ந்துகொள்ள வேண்டும். வீரமற்ற யான்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

அரசியல் அலை

## மதுவிலக்கை விரும்புகின்றது பொதுசனம்

### கவனமற்கிறக்கின்றார்கள் கட்சித் தலைவர்கள்

### தேர்தலை நோக்கித் திண்டாட்டம்

கள்ளுண்ணல் மாபாதகம் என்று திருக்குறளை நாலடியாரை வேறுபல நூல்களை எடுத்துக்காட்டி விளங்கவைத்த காலம் போய்விட்டது. மதுவை விலக்குவது அரசியல் தெறியா அன்று என்ற காலம் தொடங்குகின்றது

அந்தக்காலத்தில் அரசியற் கட்சியில் அடியெடுத்துவைக்க மதுவிலக்கு இயக்கமே உதவினது. இப்போதைய பிரதமர் அரசியற் தீட்சை பெற்றது மதுவிலக்கியக்கத்திற் கலந்துகொண்டபொழுதே.

இந்தக்காலத்தில் மதுவிலக்கைப் பற்றிய பகிரங்கமாகப் பயப்படுகின்றார்கள் கட்சித் தலைவர்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியோ, விடுதலைக் கட்சியோ, தமிழர் மகாசபையோ, தமிழரசுக் கட்சியோ, இடதுசாரிகளோ மிகவும் அவதானமாக மதுவிலக்கு விஷயத்தை மறந்து விடுகிறார்கள். மறந்தும் அதைப்பற்றிப் பேசமாட்டார்கள். ஆனால் பேச்சளவில் மனித சமூக முன்னேற்றத்திற் குழைப்பவர்கள் என்று ஆணையிடுவார்கள்.

தொண்டரென்பது இதுதானா?

கள்ளிறக்குவோர் சங்கங்களிற் கலந்து பேச்சு நிகழ்த்துவார்கள். கள்ளிறக்குந் தொழிலை எவ்வாறு சீராக்க வேண்டும் என்று ஆலோசனையுங் கூறுவார்கள். ஆனால் தேசத் தொண்டர்கள்!

பொதுசனமோ எப்போது இந்தக் கள்ளரக்கன் தன் மூடுவான் என்று எண்ணமாக இருக்கிறார்கள். மதுவுண்டு மதிகெட்டவர்களால் வரும் துன்பங்களைச் சகிக்க முடியாது கல்லற்படுகின்றனர்.

பொதுசன நன்மைக்குழைக்கிறோமென்று வாய்ப்பறை சாற்றும் கட்சித் தலைவர்களே! உங்கள் நெஞ்சகத்தைத் தட்டிக் [illegible] பொதுசனத் தொண்டர் நீங்கள் புரிவது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ். கரஹூ மாசி மீ கச உ செவ்வாய்க்கிழமை


## கோதுமை மா மனிதர்களுக்கா? மிருகங்களுக்கா?

நெல்லினுட் பதரிருந்தால் நீக்கிவிடலாம், அரிசியிற் கல்லிருந்தால் அகற்றி எடுக்கலாம் நீராற் கழுவிச் சீராக்கி விடலாம். ஆனால் நெல்லரிசி உண்ண வழியில்லாத ஏழைகளுக்கு ஆதாரமான கோதுமை மாவுக்குட் புழுவும், அழுக்கும் இருந்தால் என் செய்வார்கள். நீராற் கழுவி எடுக்க முடியுமா? புழுக்களை அகற்றிவிட்டு மாவை உபயோகிக்க மனம் வருமா?

உணவு உதவும் பகுதியார் உதவும் மாவைக் குறைத்து வழங்கின்ற பாதகமில்லை. ஆடு மாடுகளுக்குத்தானும் உணவுக்குதவா உருக்குலைந்த அழுக்கினால் விபரீத மணம் விளைக்க கோதுமை மாவை மொத்த வியாபாரிகளுக்கு விற்பனைக்குக் கொடுப்பது நியாயமா? சுகாதாரப் பகுதியினர் பரிசீலனை செய்து உணவுக்குரியதென்று நன்மதிப்புக் கொடுக்கப்பட்ட கோதுமைமா என்று தெரிந்த பின்னர் இந்த மா வழங்கப்பெற்றதா?

யாழ்ப்பாணத்திலே உள்ள மொத்த வியாபாரி ஒருவர் தொண்ணூறு மூட்டை மாவுக்குப் பணங் கட்டிய பின்னர் அம்மாப் புழு தடைந்ததென்றறிந்ததும் அவற்றைத் தமக்கு வேண்டாமெனத் தெரிவித்ததாக அறிகின்றோம். இன்னோர் வியாபாரி புழு நிறைந்த மாவைச் சிறு தகரங்களில் நிரப்பிக் காங்கேசன்துறைப் பாராளுமன்றப் பிரதிநிதிக்கும், உணவுப் பொருள் உதவும் பகுதி அதிபருக்கும், உணவுப் பொருட் கட்டுப்பாட்டதிகாரிக்கும், மாகாண அதிபருக்கும், சுகாதாரப் பகுதியாருக்கும் அனுப்பியிருக்கின்றாராம்.

கொழும்பிற் களியாட்டம். புழுப்போல நெளியும் வறியவர்கள் வயிற்றிற் பசியால் வாட்டம்! என்ன பரிதாபம். ஏழைகளாய்ப் பிறந்தால் இறந்துவிட வேண்டுமென்று எண்ணுகிறார்களா உணவுப் பகுதியார்? அதற்காக புழுக்கள் பொலிந்த மாவுணவைக் கொடுத்துப் பெருநோய்தருவித்து மரணம் வருவிக்கின்றார்களா? இந்தப் புழு தடைந்த மா இலங்கையிலே வந்திறங்கியதும் பத்திரிகைகளிற் பலர் குறிப்பிட்டார்கள். ஆனால் அரசாங்கத்தார் பொதுசன அபிப்பிராயத்தை ஒரு துரும்பாக மதிக்காமல் அதே மாவை மொத்த வியாபாரிகளுக்குக் கொடுத்திருக்கின்றார்கள் என்று ஊரவர்கள் கொண்டுவரும் குற்றச்சாட்டுக்கென்ன பதிலளிக்கப் போகிறார்கள்.

ருவான்வெலப் பகுதியிலுள்ள ஒரு ஐக்கிய பண்டகசாலையும் வெலிமடப் பகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதியும் இதைப்பற்றிக் கூறியவையெல்லாம் ஆதாரமுள்ளவை என்றே நாம் கூறவேண்டியதாயிருக்கின்றது. பாலும் பழமும் வேண்டாம், ஒருபிடிசாதம் தந்தாற் போதும் என்று ஓலமிடும் ஏழைகளுக்கு புழுவையும் புழுதியையுமா உதவுகின்றது உணவுப் பகுதி?

# ஐக்கிய கைத்தொழிற் சங்கங்கள்

## யாழ்ப்பாண சமாசத் தீர்மானங்கள்

மேற்படி சமாசத்தின் ஆண்டுக் கூட்டம் 22-2-52 வெள்ளிக்கிழமை யன்று தலைவர் முதலியார் திரு G சுப்பிரமணியம் (J.P.) அவர்களின் தலைமையில் சமாசத்தின் காரியாலயத்தில் கூடிற்று. கூட்டத்திற்கு ஏகவியப்பகுதி உத்தியோகஸ்தர்களும், யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பாகங்களிலுமுள்ள அங்கத்துவ ஐக்கிய கைத்தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும் சமுகமாயிருந்தனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டன.

(1) யாழ்ப்பாணத்தில் நெசவுகாரர்கள் தேவையான நூல் கிடைக்காததால் பிழைப்பில்லாது கஷ்டப்படுகிறார்களென்றும், அக்கஷ்டத்தைத் தீர்ப்பதற்குத் தேவையான நூல்களைச் சமாசத்திற்கு அனுப்பிவைக்கும்படி கைத்தொழில் அதிகாரியை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகின்றது.

(2) திரு. சித்ரா (International Labour Organizations Expert) புகழ்ந்து கூறிய பிரகாரம் பட்டு நெசவுத் தொழிற்சாலையைக் கூடிய சீக்கிரம் தொடங்குவதற்கு உபகரணங்களை வரவழைத்துத் தந்து தொழிற்சாலை நடைமுறைக்கு வந்து குறிக்கப்பட்ட பட்டுத் துணிகளைத் தயார்செய்து தரும் வரையிலும் தேவையான உத்தியோகத்தரை ஜப்பானிலிருந்து தருவித்து உதவி செய்ய வேண்டுமென இச்சமாசம் கைத்தொழிற்காரியாதிகாரியைக் (Commissioner) கேட்டுக்கொள்கிறது.

(3) காசத்திட்டத்தில் தல்லது சுதந்திர அணித்தாக பருத்தி உற்பத்தியாக்குவதற்கு 50 ஏக்கர் நிலம் தந்து உதவும்வண்ணம் அரசினரைக் கேட்டு இரண்டு மாதங்களாயும் பதில் வராதது வருந்தத்தக்கதென்றும், இதுவிஷயத்தைக் கவனித்து 50 ஏக்கர் நிலம் கேட்டுக்கொண்ட பிரகாரம் கூடியசீக்கிரம் தந்து உதவும்வண்ணம் இச்சமாசம் அரசினரைக் கேட்டுக்கொள்கிறது.

இன்னும் அனேக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதன் பின் கீழ்க்கண்டவர்கள் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பெற்றனர்.

தலைவர்: முதலியார் திரு. G. சுப்பிரமணியம் J.P., காரியதரிசி: திரு அ. சீனிவாசகம், தனாதிகாரி: திரு. கே. வி. இராசையா.

மற்றும் அங்கத்துவ சங்கங்களின் பிரதிநிதிகளான 7 நிர்வாக சபை அங்கத்தினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

சீமெந்துத் தொழிற்சாலைக் கருமாதிகாரி திரு. ஹேர்ஸ் அவர்களுக்கு இங்கே வேதனம் ஈராயிரம் ரூபா ஒரு மாசம் அவர் இலங்கையை விட்டுப் போய் நாலாயிரம் ரூபா பெறுவாராம்.

# வாழ்க்கை வானில்

வளர்பதி

### கூத்தா? கும்மாளமா?

இந்திரலோகத்தை இங்கே அமைத்தது போன்ற பொருட்காட்சியை வைப்பதில் ஒரு தவறுமில்லை. கூழுக்கு வழியில்லாத ஏழையையும் கடன்பட்டுக் காட்சியைப் பார்க்க ஏவிவிடச்செய்யும் கொழும்புக் திட்டப் பொருட்காட்சி என்றல் அதன் அறநெறியை ஆர் எடுத்துரைக்க வல்லார்.

●

### மயிலிறகுக் காவடியுமா?

அலங்காரங்களும் ஆடம்பரங்களும் இருக்கட்டும், மயிலிறகுக் காவடியாட்டத்தையுமா காட்சிக்கு வைத்தார்கள் புத்த பகவானின் பெயர்கூடப் படக்காட்சியில் வரக்கூடாதென்று சமயாபிமானங் காட்டும் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் பொருட்காட்சி நிர்வாகத்தில் இல்லையா? இருந்தால் அவர்கள் இதயம் இடிக்கவில்லையா?

கிறீஸ்தவ சமயத்தைப் பற்றிய ஆபாசங்கள் களியாட்டங்களில் நிகழக்கூடாதென உணர்ச்சி காட்டும் கிறீஸ்தவர்கள் அந்த நிர்வாகத்தில் அமரவில்லையா? அமர்ந்தால் அவர்கள் அகம் கொதிக்கவில்லையா?

மகம்மது மார்க்கச் சின்னங்களை வாளர் வழங்கக்கூடாதென வாதாடும் மகம்மது சமயத்தவர் அந்த நிர்வாகத்திற் கடமை ஆற்றவில்லையா. ஆற்றின் அவர்கள் அதை ஆமோதித்தார்களா?

சைவசமய ஆசாரத்தைச் சதா சிந்திக்கும் சைவர்கள் அந்த நிர்வாகத்திற் பங்கு பற்றவில்லையா? பங்குபற்றின் இப்பழிச் செயலைப் பார்த்துக்கொண்டிருந்தார்களா?

●

### ஆலயத்தில் ஆடுங்காவடி .... ....

மயிலிறகு எதைக் குறிக்கின்றது காவடி எதைக் கருதுகின்றது காவடி எடுப்பது கோயிலிலா அல்லது கொலைப்புறத்திலா? மனிதர்களை வணங்கும் சமயமா சைவம். மனிதர்களுக்குக் காவடி வணக்கம் காட்டுபவர்களா சைவர்கள்.

●

### இதைவிட நிரீச்சுரவாதம் நன்று

சமய சின்னங்களை மத வழக்கங்களை மனம்போனவாறு மதிப்பிழக்கச் செய்யும் வழக்கம் பரவி வருவது பரபரப்பைக் கொடுக்கின்றது. அரசியற் றுறைகளில் சமூக வாழ்க்கையில் குதூகலமளிக்கவேண்டுமேயானால் மத ஆசாரங்களை இழந்து விடுகிறவர்கள் நெறியிலும் நிரீச்சுரவாதிகளை வாய்க்குவந்தபடி ஏசுவதிலும் பார்க்க இறைவனே இல்லை, சமயமே இல்லை என்று சொல்லுகிறவர்கள் நெறி மேலாயது!

## செய்தித் திரட்டு

=O=

ரோமாபுரியில் இலங்கைச் சுதந்திர தினக்கொண்டாட்டத்தில், சிங்களம் தமிழிலும் சிங்களத்திலும் பாடப்பெற்றன.

x x x

இக்கால இளைஞர் பலர் பெரும் பாவிகளாயிருக்கிறார்கள் என்று கொழும்பில் ஒரு வழக்குத் தீர்ப்பளிக்கும் பொழுது உயர்தர நீதிபதி திரு. R. R. குரோசெற் தம்பையா அவர்கள் குறிப்பிட்டார். இது ஆராய்ந்த தீர்ப்பானபடியால் இக்கால இளைஞர் இதைக் கவனித்து இப்பழிமொழி நிலையாதவாறு தம் வாழ்க்கையைப் பண்படுத்த வேண்டும்.

x x x

சமயத்தையும் அரசியலையும் இலங்கை மக்கள் கலக்கிறார்களென்று வருந்துகிறார் திரு. W. J. T. ஸ்மோலபாதிரியார். பாதிரியாருடைய மனப்பான்மையினர் இன்னும் பலருளர். ஆனால் காந்தியடிகளும் சேர் இராமநாதனும் சமயத்தின் ஒரு பகுதியே அரசியல் என்று காட்டினர். கண்ணுள்ளவர் காண்பார்.

—

## சிவராத்திரி

வதிரி கிழக்கு சனசமூக நிலயத்தில் 23-2-52 சனிக்கிழமையிரவு சிவராத்திரி விரத அனுட்டிப்புக்காகப் பிரசங்கமும் சங்கீதமும் முறையே பண்டிதர் திரு. S. கந்தையா அவர்களாலும், திரு V. நிமலராசா அவர்களாலும் நிகழ்த்தப் பெற்றன.


## இசைப்பிரியர்களுக்கு ஓர் அருந்தருணம்!

# என்றுங்காணு :: :: இன்னிசை விருந்து

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் (College Quadrangle)

## மாசி மீ 25 உ (8-3-52)

சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு நடைபெறும்

தர்மபுர ஆதீன இசைப்புலவரும், சங்கீத சாகித்திய சிரோமணியும், பட்டினத்தார், நந்தனார், மாணிக்கவாசகர், திருமழிசை ஆழ்வார் முதலிய படங்களில் கீர்த்திபெற்றவருமாகிய

இசையரசு

## M. M. தண்டபாணிதேசிகர் வாய்ப்பாட்டு

: பாங்கான பக்கவாத்தியம் :

| | | |
|---|---|---|
| மதராஸ் | A. கண்ணன் | மிருதங்கம் |
| ,, | T. பாலசுப்பராயலு | வயலின் |
| ,, | C. V. வீருசாமி | கெஞ்சிரா |

சைவபரிபாலனசபை நாவலர் ஆச்சிரம நிதிக்காக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ இராமகிருஷ்ணஜயந்தி

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜயந்தி 27-2-52 புதன்கிழமை கொண்டாடப்பெறும்.

அன்று மாலை 5 மணிதொடக்கம் திரு. ச. அம்பிகைபாகன் அவர்கள் தலைமையில் ஓர் பிரசங்கக் கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

திரு. கி. நாகலிங்கம் (எழுத்தாளர்) அவர்கள் விரிவுரையாற்றுவார்கள்.

சங்கீதபூஷணம் திரு. சண்முகரத்தினம் அவர்களால் இசைவிருந்துக்கச்சேரியும் நடத்தப்படும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டில்

சுதுமலை விசுவநாதர். அம்பலவாணர்

இல. 7293 —வழக்காளி.

விரோதமாக

சுதுமலை, இப்பொழுது மட்டக்களப்பு திருக்கோணமலை ரோட், 169 ம் நம்பர்.

1. வேலாயுதம் கதிரவேலும்.
2. சுதுமலை வேலாயுதம் மகள் சின்னப்பிள்ளையும். —எதிரிகள்

மேற்குறித்த கோட்டின் 7293-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கமிஷன் கட்டளைப்படி இதன் கீழ்க் காணப்படுங் காணிகள், 1952-ம் ஆ. மே. (வைகாசி) மீ 17-ந் உ. சனிக்கிழமை முற்பகல், 10 மணி தொடக்கம் முறைபே, ஒவ்வொன்றாகும் கீழ்வரும் பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 3755-18-ம் இன்னும் ரூபா 3000/= 20-11-50 தொடக்கம் 30-1-51 வரைக்கும், ஒரு ஒன்றுக்கு நூற்றுக்கு, எட்டு வீத வட்டியும் அதன் பின் மொத்தத் தொகைக்கு இறுக்கப்படும் வரையும், ஒரு ஒன்றுக்கு நூற்றுக்கு ஐந்து வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா. 2489½-ம் இதில் (தீர்வைவரையும் பொருந்த செலவு ரூபா. 174-84, கமிஷன் அனுப்பிய செலவு ரூபா. 35-55, இனிமேல் பொருந்தும் செலவு ரூபா. 38-20) இதில், இறுக்கப்பட்ட கோட்டுச்செலவு ரூபா. 125/= கழிய.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திரிக் வலிகாமம் மேற்கு மானிப்பாய்க் கோவிற்பற்று சுதுமலையிலுற, இணைவிலும் கவுடு கோவியும், நில. பா. 7⅜-ம வீதும், இணறும், மற்றுங் கட்டிடங்களும், வான்செய்பயிர்களும், முதிர் இளம் பனைகளும். எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு கணபதி வேலாயுதத்தின் ஆதனம், தெற்கு சரவணை மயில்வாகனத்தின் ஆதனம். இவ்வெல்லைகளுக்குட்பட்ட காணி முழுவதும் அதைச் சேர்ந்தவைகளும்.

2. மேற்படி கோவிற்பற்று ஆனைக்கோட்டையிறை, முல்லைக்கட்டையடி, நில. பா. 7-ம் (வழும) வான்செய்பயிர்களும், முதிர் இளம் பனைகளும், தெய்வானைக்குரிய மேற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றிற் பங்கும், வழிவாய்க்கால் உரித்தும். எல்லை கிழக்கு செல்லையா பெண், சின்னாச்சிக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம், வடக்கு கந்தையா பெண் இராசம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனமும், கையொழுங்கை முகப்பும் மேற்கு சரவணை மகள் பெண் தெய்வானையின் ஆதனம், தெற்கு பொன்னர் கந்தப்புவுக்கும், பங்காளருக்குமுரிய ஆதனம். இவ்வெல்லைகளுக்குட்பட்ட காணியடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

பெ. முத்துத்தம்பி
வெக்கேஷன் கமிஷனர்
23—2—52.

சுதுமலை தெற்கு, மானிப்பாய்,
1952-ம் ஆ. பெப்ருவரி மீ 23-ந் உ.
M. 139 26—2—52.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

இலக்கம் 7496 D. C. J.

வண் — மேற்கு
மீரான் மொகிதீன் மொகமெட் மீரான் லெப்பை
வண் — மேற்கு
குப்பைபிச்சை மொகமெட் கல்ந்தர்லெப்பை பட்சத்தில்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் 7496ம் இலக்கத்திலே தீர்ந்த தீர்வையின் பிரகாரம் 5407-ம் இலக்க சட்டின்போல் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்வரும் ஆதனத்தை 1952ம் ஆண்டு சித்திரை மீ 7ம் உ பிற்பகல் 4 மணி தொடக்கம் குறித்த காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பகுதி யாழ்ப்பாணக் கோவிற்பற்று வண்-மேற்கு இறை "பிச்சைக்குளத்தாமடை" நிர 1⅛ம் வீடும் கிணறும், செய்பயிர் வான்பயிர்களும்.

எல்லை கிழக்கு யூசோவ் செயினு மொகமெட்டும் பங்காளரும் வடக்கும் மேற்கும் ஒழுங்கைகள். தெற்கு மீரா லெப்பை பெண் ஆசியா உம்மாவும் மற்றும் பேரும் - இதடங்கலும்.

S Ratnasabapathy,
Commissioner of Sales

Jaffna,
25-2-52.

M. 218 26—2—52.

## தேவை

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் ஐக்கிய பண்டசாலைக்கு 1-4-52ல் இருந்து ஒரு மனேஜரும் ஒரு கிறவைக்காரனும் தேவை. மனேச்சரோ கிறவைக்காரனோக் கொண்டுவரவேண்டும். சம்பளம் அவரவர் தகுதிக்குத் தக்கதாகக் கொடுக்கப்படும். மனேச்சரும் கிறவைக்காரனும் மொத்தமாக ரூபா 500/= பிணை கட்டவேண்டும். விரும்புவோர் 19-3-52 க்கு முன் விண்ணப்பப் பத்திரம் காரியதரிசிக்கு அனுப்பவேண்டும்.

ஓட்டுமடம் ஐக்கிய பண்டகசாலை,
வண்ணார்பண்ணை, 18-2-52

M. 214 19, 22, 26—2—52.

## அணிந்துரை அரங்கம்

### இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம்

பஞ்சாங்க பரம்பரை பிரம ஸ்ரீ இ. ச. இரகுநாதையரவர்களால் கணிக்கப்பெற்ற நந்தன வருஷ வாக்கிய பஞ்சாங்கம் வழக்கம்போலச் சிறப்பாக வெளியிடப்பெற்றிருக்கின்றது. வெளியீடு சோதிட கணித முறையில் சாஸ்திரம் அறியப்படவேண்டிய விபரங்களைத் தன் அகத்தே பொதிந்திருக்கின்றது. இதன் விலையும் வழக்கம்போல ரூபா 1-25.

கிடைக்குமிடம்;
சோதிடபரிபாலனமடம்
கொக்குவில்

卐

### கலைமகள் வாக்கிய பஞ்சாங்கம்

தென்னிந்திய இட்டமொழி திரு. சி. சூரிய நாராயண பிள்ளையவர்களால் கணிக்கப்பெற்ற இப்பெயர் தாங்கிய வாக்கிய பஞ்சாங்கம் இம்முறையே முதன் முதலாக வெளியிடப்படுகின்றது. கொழும்புச் செட்டியார் தெரு 124 ம் இலக்கத்தில் அமைந்திருக்கும் கலைமகள் வியாபாரச் சங்கம் (Kalimagal Company) இதனை அழகுபெறப் பதிப்பித்திருக்கிறார்கள். புதிய பஞ்சாங்க வெளியீடென்ற முறையில் நவமான பல அம்சங்கள் பொருந்தியிருக்கின்றன. 1921ம் ஆ தொடக்கம் இற்றைவரைக்கும் தமிழ்த் தேதிக்குச் சரியான ஆங்கிலத் தேதிகளைக் காட்டும் அட்டவணையொன்றைக் கொண்டுள்ளது.

இதன் விலை ரூபா 1

மக்களுப்பிய பிரதிகளை அன்புடன் ஏற்றும்.

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

(22-2-52) தேதியில் வெளிவந்த

### ஐய வினாவுக்கு விடை

"தழிவுற்ற தக்கையர்" என்றது அவனுடைய சிறிய தக்கையராகவாய் யுத்தத்திலே மாண்ட சிங்கமுகாசுரன், புலிமுகன், ஆடற்சிங்கன் முதலானோரைக் குறித்தது; புலிமுகனும் ஆடற்சிங்கனும் மாயையிடத்து நற் காசிபமுனிவனுக்குப் பிறந்த மக்களாவர்;

"வானுநுங்குட
வாய்தலின் வைகி
அனுதேன்றும்
அளித்திடுகின்றேன்
மேஹன் பாலய
விநித்திடும் மைந்தன்
ஊனுர் செம்புனல்
உண்டுமிழ் வேலான்"

என சூர்புகு படலம் பத்தாம் திருவிருத்தத்தில், புலிமுகன் மாயையின் மக்களுளொருவன் எனக் கூறப்பட்டிருக்கிறது; இவன் பெயரைப் 'பல்பொறிமாமுகமுள்ளான்' எனவும், "வெம்புலிமாமுகவீரன்" எனவும் ஆசாரிய சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்.

ஆடற்சிங்கனும் மாயையின் மகன் என்பது,

"துங்கமில் சூர்துணை
தொல்படை மன்னன்
அங்கவனென்ன
அரித்தலை கொண்டான்
பங்கல மாயவள் மாமகன்
ஆடற்
சிங்கன்எனப்படு
சீர்ப்பெயருள்ளான்"

எனச் சிங்கமுகாசுரன் வதைப்படலம் 46-ம் திருவிருத்தத்தில் வருவதால் அறியலாகும்.

— "புலியூர் சோன்"

## திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும்

## திறமான ருணிமார்க்ஓடுகள் 13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

Std. 2

## அறிவித்தல்

### ஆசிரிய கலாசாலைப் பிரவேச வகுப்பு

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை மண்டபத்தில் மேற்படி வகுப்பு கர வருடம் மாசி மீ 18-ம் தே (1-3-52) சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி (31-5-52) வரையும் நடைபெறும்.

வகுப்பிற் சேர விரும்புவோர் வகுப்புக் காலம் முழுவதற்கும் உரிய வேதனப் பணம் முப்பது ரூபா வையும் முற்பணமாகச் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும். விடுதியிற் சேர விரும்புவோர் மாசம் இருபத்தைந்து ரூபா வீதம் செலுத்த வேண்டும்.

சைவ ஆசிரியகலாசாலை,
திருநெல்வேலி,
21-2-52.

இங்ஙனம்
சோ. நடராசா

## சிவாலயம் அமைத்த செங்கட்சோழநாயனார்

1-ம் பக்கத் தொடர்ச்சி

திருவானைக்காவிலே தாம் திருவருள் பெற்றதையுணர்ந்து வெண்ணாவலின் கீழ்ச்சிவபெருமானுக்குத் திருக்கோயிலமைப்பித்தார். "அகலியை கல்லதானான்.... பகலவன் குலத்திற் சோழன்றிப்பாரெலாமுழுதாண்டு கீசரிவா அரசனுருவானிலாகி...." என்னுஞ் சிவஞானசித்திச் செய்யுள் இத் திருச்சரிதையைக் குறிக்கும் சிறப்பு உற்று நோக்கத்தக்கது. இன்னும் பலவிடங்களிற் சிவாலயங்களமைப்பித்துச் சிதம்பரத்தையடைந்து நடராசப் பெருமானை வணங்கிப் பேரன்பு பெருகியுருகி உள்ளங் களிப்ப வாழ்ந்து தில்லைவாழந்தணர்களுக்குத் திருமாளிகைகளமைப்பித்து, மேலும் பல திருத்தொண்டுகளைப் புரிந்து வாழ்ந்து சிவலோகப்பெருமான் திருவடிநிழலை எய்தினர்.

## தேர்தல் விநோதம்

### வென்றவர் கட்டுக்காசு தோற்றார்

இந்திய பொதுத் தேர்தலில் அஜம்கார் பகுதியில் சாக்கிரித் தொகுதியிற் போட்டியிட்ட அகில இந்திய தேசிய மகாசபை அபேட்சகர் சுவாமி சத்தியானந்த போட்டியிட்டவர்களைத் தோற்கடித்துத் தெரிவு செய்யப்பட்டார்.

ஆனால் 32000 வாக்காளர்கள் வாக்களித்திருந்தும் இவருக்கு 5000 வாக்குகளே கிடைத்தமையால் கட்டுக்காசை இழக்க நேர்ந்தது.

## தினவரவு இடாப்பு

பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் பலர் பிரேரித்தபடி எங்கள் தினசரி இடாப்புக்கள் உயர்ந்த காகிதத்திற் சிறந்த முறையில் அச்சிட்டு அழகுற அமைக்கப்பட்டுள்ளன.

விலை ஒன்றரை ரூபா.

மனேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை
யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டில்

மானிப்பாய்
1 சின்னத்தம்பிஇராசரத்தினமும்
2 பெண் சின்னத்தங்கைச்சியும்
— வழக்காளிகள்

இல 7923

விரோதமாக

நவாலி, இப்பொழுது கினிகொச்சி 7-ம் வாய்க்கால்
1 கணபதி கதிரவேலுவும்
2 கதிரவேலு பெண் சேதுவும்
— எதிரிகள்.

மேற்குறித்த கோட்டின் 7923ம் இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கமிஷன் கட்டளைப்படி இதன் கீழ்க் காணப்படுங் காணி, 1952-ம் ஆ. ஏப்ரில் மீ 5-ம் உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

காணிவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திரிக் வலிகாமம் மேற்கு மானிப்பாய்க்கோவிற்பற்று. நவாலியிறை. சாக்காச்சிவயல் நெல் பா. மூன்றும் (3-ம்) பயிர்வகைகளும் கிணறும். புதிதாகக் கட்டப்பட்ட கல்வீடும், சமையல்மாலும். எல்லை கிழக்கும் வடக்கும் சரவணமுத்து சுப்பிரமணியத்தினுரிமைக்காரருக்குரிய ஆதனம், மேற்கும் தெற்கும் ஒழுங்கை. இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 803-45 ம் இன்னும் ரூபா 600/= க்கு 26 6-51 தொடக்கம் 13-9-51 வரைக்கும் ஒரு ஒன்றுக்கு நூற்றுக்கு ஏழுவீத வட்டியும் அதன் பின் தீர்வையின் மொத்தத்தொகைக்கு இறுக்கப்படும் திகதிவரைக்கும் ஒரு ஒன்றுக்கு நூற்றுக்கு ஐந்து வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 190-78ம் இதில் (பொருந்திருக்கும் செலவு ரூபா 128-68) கமிஷன் செலவு ரூபா 34-75, இனிமேல் வரும் செலவு ரூ 27-35.

பெ. முத்துத்தம்பி
வெக்கேஷ்கமிஷனர்.
23-2 52.

சுதுமலை தெற்கு, மானிப்பாய்
1952ம் ஆ. பெப்ருவரி மீ 23ம் உ.
M. 140 26—2—52.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானமிழந்து மாற்றார்பின்செலல் தமிழ் மரபாகாது

முதலாம்பக்கத் தொடர்ச்சி

வாளாவிருந்தேன் எனவெண்ணுதல் கூடாது என எண்ணினன் "புட்டுவன் தலைடையின்றே பழியென வொழிவன்" எனவீரமும் பழிபட வாழாப் பண்பும் மிளிருமாறு உரைக்கின்றான்.

விழிபட முதல்வரெல்லாம்
வெதும்பினரொதுங்கிவீழ்ந்து
வழிபட லைசூழன்று
மடிப்பட வந்ததேனும்
அழிபடை தாங்கலாற்று
மாடவரியாண்டும் வெஃகாப்
பழிபட வந்த வாழ்வை
யாவரே யுவக்கற் பாலார்.

பெரும் பேருள் அடைவதில் பழிபடல் ஒழிவாகாது என்ற ஆரிய முழக்கத்தைத் தமிழன் வழக்கத்திலிருந்து நீக்கவொட்டாது கழைதல் வேண்டும்.

## இழிமுறையேகிப் பெரும்பொருள் அடைவது நெறியா?

"இன்றியமையாச் சிறப்பின வாயினுங், குன்ற வருகவிடல்" என்று அறவழியுரைத்த தமிழனின் உயிர் அழியவரினும் பழிபட வாழாதமரபை மாசுபடுத்தும் அவன் செயல் ஆண்மையற்றது என அவன் முன் காட்டிவிட வேண்டும் என எண்ணினன். உயிர்போக வரினும் அதனைத் தவிர்ப்பதற்கும் பழிபட வாழாத தமிழன் மூன்றுலகினையும் பெறினும் ஒருப்படுவானோ? நீ இராவணனுட்சியை மாத்திரம் விரும்பி ஆடவர் விரும்பா வாழ்வை மேற்கொண்டாய் எனுமுரை தோன்ற "உலக மூன்றமடிப்பட வந்ததேனும், ஆடவர் யாண்டும் வெஃகாப் பழிபட வந்த வாழ்வு" என எடுத்து மொழிகின்றான்:

சீருடைத் தனையுமுன்னை
மீனென் சிருதரெல்லாம்
வேருடைத்தனையும் வீவாரி
ராவண னோடு மீளார்
ஊருள தொருவனின்றாய்
நீயுனை யுறைய கினனோடு
ஆருளரக்கர் கிற்பாராக
வீற்றிருக்கவையா.

தனது வாழ்நாள் முழுவதுமே அன்புடன் காத்த அண்ணனை மறந்தான். அமைட்டுமா? அவன் குலத்தையே அழித்து அவனாட்சியைத் தானாளவுமெண்ணினன். அவ்வித தன்மையாளன் செய்ந்நன்றி கொன்றவனல்லவா? "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லைச், செய்ந்நன்றி கொன்றமகற்கு" என்றவலவா அறமுரைக்கின்றது. மறுமையில் உய்வில்லை என்று தான் தமிழன் அறுதியிட்டான் இம்மையிலுமல்லவா உய்தியில்லை என்பதை இவன் செயலாலாகும் விளைவு காட்டுகின்றது. இராவணன் சுற்றமும் இலங்கை மக்களனைவருமே அழிந்தொழிவர் அன்று இவன் மாத்திரமே இங்கு வாழ்வான் அதனால் இவனுக்கு வரும் பயனேதுமுண்டா? தனித்து வாழ்வதால் இவனுக்கேதாவது உய்வுண்டா? 'செய்ந்நன்றி கொன்ற நீ உய்திபெறல் முடியாது என்பதை இம்மையிலேயே உணரப் போகின்றாய்' என்ற உரை அவன் வாக்கிற் பிறக்கின்றது. "ஊருள தொருவனின்றாய் நீயுனையுறைய கினனோடு, ஆருளர் அரசுவீற்றிருக்க" என அவனுரை உரைக்கின்றான்.

முந்தைநா ளுலகந்தந்த
முந்தவானோர்கட் கெலாந்
தந்தையார் தந்தையாரைச்
செருவிடைச் சாயத்தனிக்
கந்தனார் தந்தையாரைச்
சுவையோ பொருகைக்

கொண்ட
எந்தையாராசுசெய்வதிப்பெரும்
பலங் கொண்டேயோ.

## குலங் கெடுத்த கோடரி வீடணன்!

பெருவலி படைத்த இராவணன் அயலார் துணையின்றி அதிசயிக்கத்தகும் செயல்களை ஆற்றினனென்பதை எண்ணிய மேகநாதனுள்ளத்தில் வீடணனின் இழிதொழிலாகும் வடுநீக்கமுடியாது என்ற எண்ணம் பிறந்தது. உடல் துணையற்ற நிலையிலும் கையில் வேல் கொடுத்து இளங்குமரனை யல்லவா போர்முனைக்கு அனுப்பினள் ஒருமாது. தமிழ்ப் பெண்ணிடமல்லவா அவ்வித ஆண்மை தோன்றியது. வீடணன் பிறப்பால் ஆடவன், தன் தமையனரசையாள மாற்றார் உதவியை நாடினன் பேடியானன், எனத் தன் குலத்திற்கு வடுவழைக்கும் இழிதொழிலாளன் நிலையை உன்னினன். இராவணனாட்சியை விரும்பினால் நீயே ஆண்டிருக்கலாம் இன்று உன் குலத்தோர் வீரத்தை யொழித்து மாற்றார் பலங்கொண்டல்லவா ஆளவிரும்பினாய். இது உனது ஆண்மையற்ற பேடிமையை யல்லவா விளக்குகின்றது என அற்வுறுத்துவான் "எந்தையாராசு செய்வதிப்பெரும் பலங்கொண்டேயோ" எனச் சுட்டிக் கூறுகிறான்.

பனிமலர்த் தவிசின்மேலோன்
பார்ப்பன குலத்துக்கெல்லாந்
தனிமுதற்றலைவனான
வன்னவர்தமரர் தாழ்வார்
மனிதருக்கடிமையாய் நீ
யிராவணன் செல்வமான்வாய்
இனியுனக்கென்னோமான
மெங்களோடடங்கிற்றன்றே.

அமரர்களே வணங்கும் தலைமை பெற்ற பெருவீரன் ஆட்சியென்றும் ஆசையுட்பட்டு மாற்றார் பின் அலைந்த நிலைகண்டு அறிவிழந்தான் மேகநாதன். இராவணன் குலம் முழுதும் அழிந்தொழியின மானமென்பதே அழிந்தொழியு மெனபதை யுணர்ந்தான். ஆரியர் மானமற்றவர்களா. அவர்கள் பின் சென்ற இவனும் மானமற்றவன். யாமிறந்தபின் தான் மானமுடன் வாழ்வதாக இவனெண்ணலாம். அவ்வெண்ணந் தவறுடைத்தென்பதை இவனுக் குணர்த்திவிட வேண்டும் என உன்னினன். நீ வாழ எண்ணியுள்ள மாற்றாரான ஆரியர் மானமற்றவர். நம்முடன் மானமும் இறந்தொழியும் எனபதனை உணர்த்துவான். "இனியுனக்கெனனோமான மெய்களோடடங்கிற்றன்றே" என்றுல.

சொல்வித்தும் பழித்துநகை
முக்கினைத் தணிவித்தோரால்
எவ்வித்தும் படைக்கையுகை
டமையனை யெங்களோடுங்
கொல்வித்துத் தோற்றகின்ற
கூற்றினர் குலத்தையெல்லாம்
வெவ்வித்தும் வாழும் வாழ்வின்
வெறுமையே விழுமிதன்றே.

## தன் குல மொழித்துத் தாவரசாளுதல்!

தன்குலமழியத் தானுளலாமென்னும் எண்ணந் தலைமேற் கொண்டு நின்ற வீடணன் நிலை வெறுமை நிலையே யென்பதை எண்ணினன் மேகநாதன். எல்லோரையுங்கொல்வித்து நீ ஆளலாமென எண்ணினாய், அதைவிட வாழாது கழிதலே நன்று. நீ எய்தப்போவதை வாழ்வென எண்ணியுள்ளாய் மக்களனைவருமேயழிய வெறுமிடமே உன்னாட்சிக்குட்பட்டதாகும் அதைவிட வெறுமைவேறில்லை என்பதனை விளக்குமாறு "வெறுமையே விழுமிதன்றே" எனக் குறிப்பிட்டுரைத்தான்.

எழுதியோரனைத்த திண்டோ
ளிராவண னிராமனம்பாற்
புழுதியே பாயலாகப்
புரண்டநாள் புரண்டுமேல்வீழ்ந்
தழுதியோ நீயுங்கூட வார்த்தியோ
விவனை வாழ்த்தித்
தொழுதியோ வென்னோ செய்யத்
துணிந்தனை விசயத்தோனாய்.

யாருக்கும் புறங்கொடாப் பெருவீரன், போர்க்களத்திலமாண்டொழிவான் என்பதையுணர்ந்தான் மேகநாதன். இன்று ஆசைவயப்பட்ட வீடணன் அன்று தனக்குத்தமையன் கேடு சூழ்ந்தமையை உணர்வான் என்றெண்ணினன் இன்று அண்ணன்மீது அன்பற்ற வீடணன அன்று அன்புவயப்படுவானென எண்ணவில்லை. வெறுமிதான நிலையிலுள்ள நாட்டினைக் காணப்போகும் வீடணன் பயனற்ற நிலையில் தான நிற்கும் நிலையை உன்னி ஆர்க்கவோ மாற்றாரைத் தொழவோ முடியாது அழுதலையே மேற்கொள்ள வேண்டும் என்பது தோன்ற "அழுதியோ" என்றான்.

ஊனுடை யுடம்பினீங்கி
மருந்தினுலுயிர் வந்தெய்தும்
மானிடரிலங்கை வேந்தைக்
கொல்வரோ நீயுமன்னான்
தானுடைச் செல்வந்துய்க்கத்
தருதியே சாத்தினோடும்
வானிடைப் புகுதியன்றே
யான்பழி மறுக்கலென்றான்.

## வசைபட வாழ்தலும் ஒரு வாழ்வா?

பழிகொடுத்துப் புகழ் கொள்ளு நிலையில் நின்ற மேகநாதன் தன் குலத்தோர் பழிபட வாழ்தலென்ற வடுவுரை தன் குலம் முழுவதற்கும் வசையுண்டாக்குமே என்றெண்ணி மனம் புழுங்கினன். மாற்றார் இராவணனைக் கொலல்வில்லை வாலியைக் கொன்ற செயலொன்றால் பெருமை யிழந்தோர் தம்மைத்தாமே கொன்றனர். இராவணனிறப்பினும் அவன பெருமை இறவாது என்பதை விளக்குவான "மானிடரிலங்கைவேந்தைக் கொல்வரோ" என்றான். உன் வினையால் உனது செல்வத்தை நீயே அழிக்கத் தலைப்பட்டால் இக்காட்டை அழிந்தொழியும், நீமாத்திரமே வெறுவிலியாய் இருப்பாய என்பது தொனிக்குமாறு "நீயுமன்னான் தானுடைசெல்வந்துய்க்கத் தருதிய" எனக் குறிப்பிட்டான். யான் பழிகொண்டு உன்னைக் கொல்வேனுனல் உன் பழியொயும் நீவானடைவாய் பழிவிரும்பிய உன்னைப் பழியுடனேயே வாழுமாறு விடுகின்றேன. பழிபட்டக் கல்வழியடைதல் இன்றும் என்பதனை உணருமாறு "வானிடைப் புகுதியன்றே" யான்பழி மறுக்கில்" என அவனது வீறுபெற்ற உள்ளத்திலிருந்து வீரமொழி பிறக்கின்றது. உயர்வுள்ளன்றான். வினைவிளைவுதனை யேறகின்றான் வீரமைந்தன்.

மேகநாதன் தன்மீது சுமத்தியதெல்லாம் வீண் பழிமொழி யென்பதைச் சாதித்து வீரனாக விளக்க வீடணனுக்கு முடியவில்லை. பழிபடும் வாழ்வை வெறுக்கவும் மனமில்லை. வீரமைந்தன் முன் மானமிழந்து மாற்றார்பின் னின்றான். புகழ்கொடுத்துப் பழிகொண்டான், மாபாவியானான்.


# சாலாமிஸ்ரி லேகியம்

இதனால் மூலக்குடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, செஞ்செரிவு, கை கால வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பனிசம், பார்வைக் குறைவு, குலை, சத்துவாயுவு முதலிய வியாதிகள் குரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். தேசபுஷ்டி, வஜீரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிசமாய்க் காணுதலால் சேரும் பல கோயைகளும் தீர்த்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50, கால்றுத்தல் விலை ரூபாய் 6-75

வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.

வி. பி. பி: மூலமும் மருந்துகள அனுப்பப்படும்.

## சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினுல் காலை பல் விளக்கி வந்தால், வாய் நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் ஆணி கட்டல் பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை

எமது விலாசம் நி. 3/1 தட்டாதெரு
M 196 1-2—30-4-52. கோட்டைமுனை, மட்டக்களப்பு.



# யாழ்ப்பாணம் ஐக்கியநாணயநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 134,3670

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை,

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப்பற்றுவரவு.**

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.**

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்.**

கொழும்பிலுள்ள "நாஷனல" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்.**

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

Std. 14 20-11-46—20-11-49.

S. கனகசபை
சிறுப்பர்.



இலங்கையின்
மிகப்பெரிய
—நகை—
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.


Printed and Fuplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai. Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Tuesday. February 26. 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org